# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



அஞ்சல் ஒப்புகை சான்றுடன்

## நகர் ஊரமைப்புத் துறை

மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), ஈரோடு மாவட்டம் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை :திரு.ந.ரா.தியாகராஜன், பி.டெக்.,

ந.க.எண். 1818/2020 ஈ.மா-2 நாள் : 16.03.2021

பொருள் : மனைப்பிரிவு - நகர் ஊரமைப்புத் துறை – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - ஈரோடு மாவட்டம் - பெருந்துறை வட்டம் - சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் - வடமுகம் வெள்ளோடு ஊராட்சி மற்றும் கிராமம் - ரீ.ச.எண்.547/7B, 547/8B–ல் 2.45ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான – தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குவது – தொடர்பாக.

பார்வை :

1. மனுதாரர், திருமதி.P.மல்லிகா அவர்களின் இணையதள விண்ணப்பம் எண்.202000401027571 நாள்.21.09.2020
2. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 04.02.2019.
3. வேளாண்மை இணை இயக்குநர்(பொ), ஈரோடு அவர்கள் கடிதம் எண்.அ4/4004/2020(68), நாள்.09.10.2020
4. இவ்வலுவலக கேட்பு கடிதம் எண்.05.03.2021
5. மனுதாரர் கட்டணம் செலுத்திய நாள். 06.03.2021
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/எல்ஏ1, நாள்.08.09.2017.
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்.12201/2017/சிபி, நாள்.28.09.2017.
8. அரசாணை எண்.79 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நவ4(3), நாள்.04.05.2017.

-----------

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், வடமுகம் வெள்ளோடு ஊராட்சி மற்றும் கிராமம், ரீ.ச.எண்.547/7B, 547/8B–ல் 2.45 ஏக்கர் புன்செய் நிலத்தினை விவசாயமற்ற அபிவிருத்தியாக குடியிருப்பு மனைப்பிரிவாக மாற்ற பார்வை 3-ல் கண்ட அறிக்கையில் விவசாயமல்லாத உபயோகத்திற்கு மாற்ற தடையின்மைச் சான்று பெறப்பட்டதனைத் தொடர்ந்து அவ்விடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மற்றும் கீழ்கண்ட நிபந்தனைகளின் பேரில் தொழில் நுட்ப முன் இசைவு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 47 A(2)-ன் படி அளிக்கப்படுகிறது.

பார்வை 2-ல் கண்ட அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 04.02.2019-ன்படி நில உரிமை குறித்து உள்ளாட்சி நிர்வாகமே பொறுப்பானதாகும் மற்றும் நிர்வாக அதிகாரியால் (EXECUTIVE AUTHORITY) நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றின்பேரில் இத்தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது.

ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/(ஈ.மா)எண்.60/2021** என எண்ணிடப்பட்டு இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 விதி எண்.41(4)-ன்படி, பூங்காவிற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பொது ஒதுக்கீடு (10%) 635.00ச.மீ க்கு அரசு வழிகாட்டி மதிப்பு தொகை ரூ.58,500/- மனுதாரரால் அரசுக்கு செலுத்தப்பட்டுள்ளது. மனைப்பிரிவு நிபந்தனை எண்.16-ன் பொது ஒதுக்கீடுகளையும் மற்றும் சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தையும் மனுதாரரால் தானப் பத்திரம் மூலம் தலைவர், வடமுகம் வெள்ளோடு ஊராட்சி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மனைப்பிரிவு நிபந்தனை எண் 19(இ) 19(உ) குறித்து உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் அளிக்க வேண்டும்.

புன்செய் விவசாய பகுதியிலிருந்து விவசாயமல்லாத குடியிருப்பு மனைப்பிரிவாக அபிவிருத்திக்கு மாற்ற நிலஉபயோக மாற்ற பயன்பாட்டிற்கு அரசாணை எண்.79 வீட்டுவசதி மற்றும் வளர்ச்சித்துறை நாள்.04.05.2017-ன் விதி-3ன்படி ரூ.1000/- பரிசீலனைக் கட்டணம், உள்ளாட்சியில் பெற்றும் விதி-9ன்படி 3% மனைப்பிரிவு மொத்த இடத்தின் விற்பனை மதிப்பில் (market value)ல் கீழ்கண்ட அரசுக் கணக்குத் தலைப்பில் மனைப்பிரிவு விண்ணப்பதாரரிடமிருந்து பெற்று உள்ளாட்சியால் செலுத்தப்படவேண்டும். செலுத்திய விவரம் இவ்வலுவலகத்திற்கும் தெரிவிக்கப்படவேண்டும்.

<u>கணக்குத் தலைப்பு</u>

**0217 Urban Development**
**60 Other Urban Development schemes**
**800 Other Receipts.**
**AS Receipts under Land use conversion charges**
**27 Non Taxation fees – 09 collections**
**(DPC: 0217-60-800-AS-2790)**

அவ்வாறு நிலப்பயன்மாற்றத்தொகை அரசுக்கு செலுத்திய பின்னரே நிலப்பயன்மாற்றமும் தொழில்நுட்ப முன் இசைவும் அமுலுக்கு வரும், அதன்பின்பே உள்ளாட்சி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்கப்படவேண்டும்.

மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(ஈ)-ன்படி உள்ளாட்சி மன்றத் தீர்மானம் மற்றும் அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இக்கடிதம் மனைப்பிரிவு நிபந்தனைப்படிவம், மனைப்பிரிவு வரைபட நகல் பெற்றுக்கொண்டமைக்கு மறுதபாலில் ஒப்புகைச்சான்று இவ்வலுவலகத்திற்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள்:</u>

1. பார்வை 6-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கையின்படி "உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விவரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்"

சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், வடமுகம் வெள்ளோடு ஊராட்சி

**முன்னிலை:தலைவர் திருமதி.I.வாசுகி அவர்களின் நடவடிக்கைகள்**

ந.க.எண்:106/2020-2021 நாள்:22-3-2021

பொருள்: மனைபிரிவு அங்கீகாரம் - சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் வடமுகம் வெள்ளோடு ஊராட்சி, செம்மாண்டம்பாளையம் கிராமம் ரீ.ச.எண். 547/7B, 547/8B –ன்படி 2.45 ஏக்கர் பரப்புள்ள மனைபிரிவிற்கு ஒப்புதல் வழங்குதல் - சார்பாக

பார்வை:

1. அவல்பூந்துறை சார்பதிவாளர் அலுவலக நன்கொடை ஆவண எண்: புத்தகம்-208/2021 நாள்:05-01-2021
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ஈரோடு மாவட்டம் ந.க.எண்:1818/2020 ஈ.மா.02நாள் 27-10-2020
3.. வடமுகம் வெள்ளோடு ஊராட்சி தீர்மான எண்: 209/2021 நாள்:19-2-2021
4 சலான் எண்:30 நாள்: 22-3-2021

உத்தரவு:

பார்வை 1 முதல் 3 வரையிலான கடிதங்களின் அடிப்படையில் சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், வடமுகம் வெள்ளோடு ஊராட்சி கிராமம் ரீ.ச. எண். 547/7B,547/8B –ன்படி 2.45 -ல் ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் (ம.வ./ந.ஊ(ஈ.மா) எண்:60/2021-ல் வழங்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இம்மனைப்பிரிவுகளை அங்கீகரிக்கும் பொருட்டு அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் உரிய அரசு தலைப்பில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் பார்வை 3 ல் காணும் கடிதத்தின் படி வடமுகம் வெள்ளோடு ஊராட்சி மன்றத்தின் தீர்மானமும் பெறப்பட்டுள்ளது.

புன்செய் விவசாய பகுதியிலிருந்து குடியிருப்பு மனைப்பிரிவாக அபிவிருத்தி மற்றும் நில உபயோக மாற்ற பயன்பாட்டிற்கு அரசாணை எண்:79 வீட்டு வசதி மற்றும் வளர்ச்சித்துறை நாள்:22-3-2021--ன் விதி 3ன்படி ரூ.1000/- பரிசீலனைக் கட்டணம், உள்ளாட்சியில் பெறப்பட்டுள்ளது. விதி -9ன்படி 3% மனைப்பிரிவு மொத்த இடத்தின் விற்பனை மதிப்பில் (Market Value) ல் கீழ்கண்ட அரசுக் கணக்குத் தலைப்பில் மனைப்பிரிவு விண்ணப்பதாரரிடமிருந்து சலான் எண்: 30 நாள்:22-3-2021 செலுத்தப்பட்டுள்ளது.

எனவே பார்வை 2 ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) ஈரோடு மண்டலம் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் கீழ்க்கண்ட பட்டியல் (அ)ல் காணும் மனைகளுக்கு பத்திர பதிவு செய்து கொள்ள அனுமதியளித்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

பட்டியல்(அ):

| Plot Nos. | Sq.ft Area | தீர்மாண எண்: |
|---|---|---|
| Plot no.1 முதல் 50 வரை | 6226.48ச.மீ | 208/2021 |
| க்டை(மனுதாரர் விற்பனைக்குரியது) | | |

பட்டியல்(ஆ):

| வ.எண் | விபரம் | சதுர அடி |
|---|---|---|
| அ | ஒதுக்கப்பட்ட பூங்கா(மனுதாரர் அரசுக்கு தொகை செலுத்தப்பட்டது) | 635 ச.மீ |
| ஆ | சாலைகள் (மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைத்தது) | 3621.52 ச.மீ |

பெறுதல்:

திரு.P.மல்லிகா,

D.No.1/184,சங்ககிரி மெயின்ரோடு,

பள்ளிபாளையம் அக்ரஹாரம், ஈரோடு

நகல்:

சார்பதிவாளர்,

அவல்பூந்துறை.

தலைவர்,

வடமுகம்வெள்ளோடு ஊராட்சி.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate